



திருவள்ளூர் மத்திய மாவட்டம், பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியக் கழகம் சார்பில் பாரிவாக்கத்தில் நடைபெற்ற மாபெரும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், துணை முதலமைச்சர் – கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இதைத் தொடர்ந்து கழகத்தின் வேர்களான மூத்த உடன்பிறப்புகளுக்கு பொற்கிழி, வழங்கி எழுச்சிமிக்க உரையாற்றினார். இதில் மாவட்டக் கழகச் செயலாளரும், அமைச்சருமான ஆவடி மு.நாசர், சட்டமன்ற உறுப்பினர்கள் சந்திரன், கிருஷ்ணசாமி, மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ரமேஷ் ராஜ், மாநகர மேயர் உதயகுமார், மாநகரச் செயலாளர் சன்.பிரகாஷ், பூவை ஜெரால்டு, இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர்கள் பிரபு கஜேந்திரன், அப்துல் மாலிக், சட்டமன்ற தொகுதி பார்வையாளர் பி.டி.சி.செல்வராஜ், ராஜ்[6], சீனிவாசன், ஜெயபாலன், காயத்ரி ஸ்ரீதரன், நரேஷ்குமார், ரமேஷ், பூந்தமல்லி கிழக்கு ஒன்றியச் செயலாளர் கமலேஷ், நகரக் கழகச் செயலாளர்கள் திருமலை, மூர்த்தி, ரவி, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் தேசிங்கு, ஜெயசீலன், பிரேமானந்த், முரளிகிருஷ்ணா, தங்கம் முரளி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் சுரேஷ்குமார், லோகேஷ், கிரண், மாநகர அமைப்பாளர் துர்கா பிரசாத், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் செந்தாமரை, கருணாநிதி, உமாமகேஷ்வரன், அக்னி ராஜேஷ், பிரியா குமார், சதீஷ்குமார், மாநகர துணை அமைப்பாளர்கள் ஸ்ரீதர், முஸ்தபா அப்ரிதி, சதீஷ்குமார், புவனேஷ், ரங்கநாதன் (எ) மகேஷ் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்துகொண்டனர்.

## 75 ஆண்டுகளில் பல நெருக்கடிகள் – தாக்குதல்கள் வந்தபோதும்,

# கழகத்திற்கு கேடயமாக இருந்தவர்கள் மூத்த முன்னோடிகள்தான்!

### திருவள்ளூரில் நடைபெற்ற பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சியில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சி உரை!

**திருவள்ளூர்,ஜூலை 25-**

**திருவள்ளூர் மத்திய மாவட்டம், பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியக் கழகம் சார்பில் பாரிவாக்கத்தில் நடைபெற்ற மாபெரும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், துணை முதலமைச்சர் - கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இதைத் தொடர்ந்து கழகத்தின் வேர்களான மூத்த உடன்பிறப்புகளுக்கு பொற்கிழி, வழங்கி எழுச்சிமிக்க உரையாற்றினார்**

**அப்போது அவர், ``75 ஆண்டுகளில் எத்தனையோ நெருக்கடிகள், தாக்குதல்கள், விமர்சனங்கள் எல்லாம் கழகத்தை நோக்கி வந்த போது, கழகத்திற்கு ஒரு கேடயமாக இருந்தது, கழகத்தின் மூத்த முன்னோடிகளாகிய நீங்கள் தான்" என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

**இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:**

திருவள்ளூர் மாவட்டத்திற்கு வருகை தந்து, உங்களையெல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி. வருகின்ற வழியெல்லாம் பொதுமக்களின் உற்சாகமான வரவேற்பு, அன்பு நிறைந்து இருந்தது. `முதலமைச்சர் எப்படி இருக்கிறார்', `அப்பா நல்லா இருக்கிறாரா' என்று அவர்கள் எல்லோரும் என்னிடம் கேட்டனர். நம் கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்கள் நலமாக இருக்கிறார். மருத்துவர்களின் சிகிச்சையாலும், தமிழ்நாட்டு மக்களின் பேரன்பினாலும் நம் முதலமைச்சர் அவர்கள் விரைவில் வீடு திரும்புவார் என்பதை, முதலில் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

### கலைஞரின் சிலைகள்

திருவள்ளூர் மாவட்டத்தில் கலைஞரின் இரண்டு சிலைகளை திறந்து வைக்கின்ற பெருமையையும் பெற்றிருக்கிறேன். இந்த மாதத்தில் மட்டும் வடசென்னை, செங்கம், திருவண்ணாமலை என்று நான்கு இடங்களில் கலைஞரின் சிலைகளை திறந்து வைத்த பெருமையைப் பெற்று இருக்கிறேன். கலைஞர் நூற்றாண்டு நூலகத்தையும் திறந்து வைத்துள்ளோம். இந்த வாய்ப்பை எனக்கு அளித்த அண்ணன் நாசர் அவர்களுக்கு மீண்டும் எனது நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாசர் அண்ணனப் பொறுத்தவரை இளைஞர் அணியில் எங்களுக்கு எல்லாம் அவர் சீனியர். இங்கே பேசும்போதுகூட குறிப்பிட்டார். மேடையில், இருக்கின்ற பல நிர்வாகிகள் இளைஞர் அணியில் இருந்து பொறுப்பு உயர்வு பெற்று, தாய்க்கழகத்திற்குச் சென்றிருக்கிறார்கள். அந்த அளவுக்கு அவர் இளைஞர் அணிக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பார்.

### மக்கள் பணி, கழகப் பணி

இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டும் என்றால், ஒரு ஒன்றியக் கழகச் செயலாளரால் இவ்வளவு சிறப்பாக, எழுச்சியாக, பிரமாண்டமாக மக்களுக்கு பயன்படுகின்ற வகையில் நலத்திட்ட நிகழ்ச்சியை நடத்த முடியும் என்றால், அது திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கின்ற ஒன்றியச் செயலாளர்களால் மட்டும்தான் முடியும். அதற்கு இன்னும் கூடுதல் காரணம் என்னவென்றால், அவரும் இளைஞர் அணியில் இருந்து மக்கள் பணி, கழகப் பணியாற்றி இன்றைக்கு ஒன்றியச் செயலாளராக சிறப்பாகப் பணியாற்றி வருகிறார். அவருக்கும் இந்த நேரத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தலைவர் அவர்கள் இளைஞர் அணியைத் தொடங்கியபோது, அவருக்கு துணையாக பக்கபலமாக இருந்த தொடக்க கால இளைஞர் அணி நிர்வாகிகளில் ஒருவர்தான் அண்ணன் நாசர் அவர்கள். இளைஞர் அணி இன்றைக்கு இந்த அளவிற்கு உயர்ந்து இருக்கிறதென்றால், அதன் ஆரம்ப காலத்தில் அண்ணன் நாசர் அளித்த பங்களிப்பும், உழைப்பும் முக்கிய காரணம்.

### என் வேண்டுகோள்

பொதுவாக, நான் எந்த மாவட்டத்திற்குச் சென்றாலும் அடிக்கடி சொல்வதுண்டு, மாவட்டக் கழகச் செயலாளர்கள் என்னிடம் கழக நிகழ்ச்சி, அரசு நிகழ்ச்சி, திருமண நிகழ்ச்சி என்று எந்த நிகழ்ச்சிக்குத் தேதி கேட்டாலும், நான் சொல்வேன். கண்டிப்பாக நான் உங்கள் மாவட்டத்திற்கு வருகிறேன், என்னை வைத்து எத்தனை நிகழ்ச்சி வேண்டுமானாலும் நடத்துங்கள், நான் கலந்து கொள்கிறேன். ஆனால், எனக்காக நீங்கள் ஒரு நிகழ்ச்சி நடத்த வேண்டும். அதுதான் என்



வேண்டுகோள் என்று கேட்பேன். அது என்ன நிகழ்ச்சி என்று கேட்பார்கள். கழகத்திற்காக உழைத்த மூத்த முன்னோடிகளை அழைத்து, அவர்களுக்கு பொற்கிழி கொடுத்து, அவர்களை நீங்கள் கௌரவப்படுத்துங்கள். நிச்சயமாக, நான் உங்கள் மாவட்டத்திற்கு வந்து நிகழ்ச்சியில் கலந்துகொள்கிறேன் என்று சொல்லி அதை செய்திருக்கிறேன்.

இதுவரைக்கும் 50-க்கும் மேற்பட்ட கழக மாவட்டங்களில் கழகத்துக்காக உழைத்த கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழிகள் வழங்கி இருக்கிறேன். அதேபோல்தான் அண்ணன் நாசர் அவர்கள் கேட்கும்போது கூட, அவர் என்னிடம் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி என்றுதான் சொன்னார். நான் சொன்னேன். நீங்கள் 100 பேருக்காவது கழகத்திற்காக உழைத்த மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்க வேண்டும் என்று கேட்டு, அதற்கு பிறகு இணைக்கப்பட்ட நிகழ்ச்சி இந்த நிகழ்ச்சி. அதற்காக மீண்டும் அண்ணன் நாசர் அவர்களுக்கு மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### நீங்கள்தான் காரணம்

கழகத்திற்காக உழைத்த மூத்த முன்னோடிகள் உங்களை அழைத்து கௌரவிக்கிறோம் என்றால், கழகத்தின் மூத்த உடன்பிறப்புகள் நீங்கள்தான். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 5 முறை முதலமைச்சராக இருந்தார் என்று பெருமையாகச் சொல்கிறோம். கலைஞர் அவர்கள் 5 முறை முதலமைச்சராகப் பொறுப்பேற்றதற்கும் நீங்கள்தான் காரணம், இப்போது இருக்கின்ற நம் கழகத் தலைவர் முதலமைச்சராக அமர்ந்து இருப்பதற்கும், கழகத்திற்காக உழைத்த மூத்த முன்னோடிகள் நீங்கள்தான் முழுக்காரணம். கழகம் தொடங்கப்பட்டு, பவள விழாவைக் கொண்டாடிக்கொண்டு இருக்கிறோம். இந்த 75 ஆண்டுகளில் எத்தனையோ நெருக்கடிகள், தாக்குதல்கள், விமர்சனங்கள் எல்லாம் கழகத்தை நோக்கி வந்தபோது, கழகத்திற்கு ஒரு கேடயமாக இருந்தது, கழகத்தின் மூத்த முன்னோடிகளாகிய நீங்கள்தான்.

நம் முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு, இன்றைக்கு எல்லாவற்றிலும் நம்பர் ஒன் அரசாக இருக்கிறது. இங்கு ஏராளமான மகளிர் வந்து இருக்கிறீர்கள். சிரித்த முகத்தோடு, அன்போடு வந்து இருக்கிறீர்கள். நம் தலைவர் அவர்கள் நான்கு வருடங்களுக்கு முன்பு, முதலமைச்சராக பொறுப்பேற்றபோது அவர் போட்ட முதல் கையெழுத்து மகளிருக்கான விடியல் பயணத் திட்டம். இந்த விடியல் பயணத் திட்டத்தின் மூலம் இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் மகளிர் 734 கோடி பயணங்களை மேற்கொண்டு இருக்கிறார்கள். இந்த திருவள்ளூர் மாவட்டத்தில் மட்டும், 20 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டு இருக்கிறார்கள்.

பெண்கள் படிக்க வேண்டும். வீட்டை விட்டு வெளியே வந்து, மேற்படிப்பு படிக்க வேண்டும் என்று புதுமைப்பெண் திட்டம், ஆண்களுக்கு தமிழ்ப்புதல்வன் திட்டம் என்று இரண்டு திட்டங்களை நம் முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அரசுப் பள்ளியில் படித்து, எந்தக் கல்லூரியில் சென்று உயர்கல்வி படித்தாலும், அவர்களின் கல்வியை ஊக்குவிக்க வேண்டும் என்று மாதம் ஆயிரம் ரூபாயை அவர்களின வங்கிக் கணக்கில் செலுத்துகிறார் நம் முதலமைச்சர் அவர்கள்.



இந்த இரண்டு திட்டங்களின் மூலம், கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் 8 லட்சம் மாணவ, மாணவிகள் பயன்பெற்று இருக்கிறார்கள். இந்த திருவள்ளூர் மாவட்டத்தில் மட்டும் இந்தத் திட்டத்தின் மூலம் 20 ஆயிரம் மாணவ, மாணவிகள் கல்வி ஊக்கத்தொகையைப் பெற்று இருக்கிறார்கள்.

### தரமான காலை உணவு

அடுத்து இன்னொரு முக்கியமான திட்டம், நம் தலைவர் அவர்கள் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். `என் குழந்தையைப் பார்த்துக் கொள்வதற்கு முதலமைச்சர் இருக்கிறார், நம் திராவிட மாடல் அரசு இருக்கிறது' என இன்றைக்கு பெற்றோர்கள் எந்தவித தயக்கமும் இல்லாமல் மகிழ்ச்சியுடன், வாழ்த்தி பள்ளிக்கூடத்திற்கு அனுப்புகிறார்கள். பள்ளிக்கூடத்திற்கு காலையில் குழந்தைகள் வந்தால்போதும், முதலில் தரமான காலை உணவு, அதற்குப் பிறகு தரமான கல்வி. முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு நாளும் 18 லட்சம் குழந்தைகள் இந்த திட்டத்தின் மூலம் பயன்பெற்று வருகிறார்கள். இந்த திருவள்ளூர் மாவட்டத்தில் மட்டும் 57 ஆயிரம் குழந்தைகள் முதலமைச்சர் காலை உணவு திட்டத்தின் மூலம் பயன்பெற்று வருகிறார்கள்.

அதேபோல இந்தியாவே திரும்பி பார்க்கின்ற ஒரு திட்டம் என்றால், அதுதான் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம். இந்த திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாதமும் 1 கோடியே 15 லட்சம் மகளிருக்கு நம் முதலமைச்சர் அவர்கள் கடந்த 23 மாதமாக தலா 23 ஆயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறார். இந்த திருவள்ளூர் மாவட்டத்தில் மட்டும் 3 லட்சத்து 50 ஆயிரம் பேர், மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் கீழ் பயன்பெற்று வருகிறார்கள்.

உங்களில் சில பேர் விண்ணப்பித்து மகளிர் உரிமைத்தொகை கிடைக்காமல் இருக்கலாம். அதற்காகத்தான் நம் தலைவர் அவர்கள் மீண்டும் `உங்களுடன் முதலமைச்சர்' என்ற முகாமைத் தொடங்கி வைத்திருக்கிறார். அதில் ஏற்கெனவே இருந்த சில விதிகளும் தளர்த்தி கொடுக்கப்பட்டுள்ளது. விதிகளைப் பூர்த்தி செய்கின்ற அத்தனை மகளிருக்கும் நிச்சயம் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம் நிச்சயம் வந்து சேரும் என்பதை இந்த நேரத்தில் மகளிராகிய உங்களுக்கெல்லாம் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இப்படி மகளிருக்கு பல்வேறு திட்டங்களை நம் முதலமைச்சர் அவர்கள் கொடுத்து இருக்கிறார். இந்தத் திட்டங்கள் அனைத்தும் மக்களிடம் மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றுள்ளன. இதைப் பொறுக்காத ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசுதான் நம் தமிழ்நாடு அரசிற்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் பல்வேறு நெருக்கடிகளைக் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். ஒரு பக்கம் நிதி உரிமையைப் பறித்துவிட்டார்கள். இன்னொரு பக்கம் கல்வி உரிமை, மொழி உரிமையிலும் கை வைக்க முயற்சிக்கிறார்கள். சென்ற நிதியாண்டில் ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு, நம் மாநிலத்திற்கு கல்வி நிதியாக ஒரு ரூபாய் கூட ஒதுக்கவில்லை. ஆனால், பா.ஜ.க. ஆளுகின்ற மாநிலங்களுக்கு அள்ளி, அள்ளி கொடுத்துக் கொண்டு இருக்கிறது ஒன்றிய பா.ஜ.க அரசு.

### புதிய கல்விக்கொள்கை

புதிய கல்விக்கொள்கை எனச்சொல்லி மும்மொழிக் கொள்கையை ஏற்றுக்கொள்ள வற்புறுத்திக்கொண்டு இருக்கிறார்கள். எப்படியாவது தமிழ்நாட்டிற்குள் இந்தியையும், சமஸ்கிருதத்தையும் நுழைக்க வேண்டும் என்று ஒன்றிய பா.ஜ.க. அரசு முயற்சி செய்துகொண்டு இருக்கிறது. அதுமட்டுமல்ல, தொகுதி மறுவரையறை என்று சொல்லி, தமிழ்நாட்டின் உரிமையை, மக்களவைத் தொகுதிகளைக் குறைப்பதற்கான முயற்சியையும் ஒன்றிய பா.ஜ.க. அரசு செய்துகொண்டு இருக்கிறது. இதையெல்லாம் எதிர்த்துக் குரல் கொடுக்கின்ற ஒரே தலைவர் இந்தியாவில் நம் தலைவர் அவர்கள்தான். அதனால்தான் ஒன்றிய அரசுக்கு, நம் தமிழ்நாட்டைப் பார்க்கும்போது ஒவ்வொரு முறையும் கோபம் வருகிறது. இதையெல்லாம் தட்டிக்கேட்க வேண்டிய அ.தி.மு.க. இன்றைக்கு பா.ஜ.க-வுடன் கூட்டணி வைத்துள்ளது.

நம் தலைவர் அவர்களுக்கு இன்னொரு பெருமை உண்டு. தலைவர் அவர்கள் கழகத்தின் தலைவராக பொறுப்பேற்ற நாளிலிருந்து, இன்றுவரை சந்தித்த அத்தனை தேர்தல்களிலும் வெற்றிபெற்ற தலைவர் நம் தலைவர் அவர்கள்தான். அதற்குக் காரணம் தமிழ்நாட்டு மக்கள் நம் தலைவரின் மீது வைத்திருக்கின்ற நம்பிக்கைதான். இந்த நேரத்தில் நான் உங்களிடம் கேட்டுக்கொள்வது எல்லாம், வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் நம் தலைவர் அவர்கள் ஒரு இலக்கு வைத்துள்ளார்கள்.

`ஓரணியில் தமிழ்நாடு' என்ற முன்னெடுப்பையும் ஆரம்பித்து இருக்கிறோம். அதில் நம் கழகத்திற்கு பொதுமக்களை உறுப்பினர்களாக சேர்த்துக்கொண்டு இருக்கிறோம். தமிழ்நாடு முழுக்க 2 கோடி பேர் இதுவரை கழகத்தில் இணைந்துள்ளார்கள். இந்த திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் மட்டும் 2 லட்சத்து 35 பேர் இதுவரை கழகத்தில் இணைந்துள்ளார்கள்.

எனவே, நான் உங்களிடம் கேட்டுக்கொள்வதெல்லாம், வருகின்ற சட்டமன்ற தேர்தலில் நம் கழகத்திற்கு உங்களின் ஆதரவைக் கொடுக்க வேண்டும். தலைவர் அவர்கள் குறைந்தது 200 தொகுதிகளில் வெற்றி பெறுவோம் என்று சொல்லியிருக்கிறார். உங்களின் ஆதரவு இருந்ததென்றால், 200 இல்லை நிச்சயம் 200-க்கும் அதிகமான தொகுதிகளில் நம் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றிபெறும். இங்கு வந்திருக்கின்ற மகளிர் உங்கள் கையில்தான் அது இருக்கிறது.

### தலை வணங்குகிறேன்

கழகத்தின் மூத்த முன்னோடிகள் உங்களை எல்லாம் பார்க்கும்போது எனக்குப் பெருமையாக இருக்கிறது. கழகத்தின் வரலாறாகத்தான் நீங்கள் இங்கே அமர்ந்திருக்கிறீர்கள். அதேநேரத்தில் உங்களைப் பார்க்கும்போது கொஞ்சம் பொறாமையாகவும் இருக்கிறது. ஏன் பொறாமையாக இருக்கிறதென்றால் நான் தந்தை பெரியார் அவர்களை நேரில் பார்த்தது இல்லை. போட்டோவில், வீடியோக்களில் பார்த்திருக்கிறேன். அவரின் பேச்சுகளைக் கேட்டிருக்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்களை நேரில் பார்த்தது கிடையாது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை நேரில் பார்த்து இருக்கிறேன். பேராசிரியர் தாத்தா அவர்களை நேரில் பார்த்து இருக்கிறேன். ஆனால், இங்கு வந்திருக்கின்ற கழகத்தின் மூத்த முன்னோடிகள் நீங்கள் தந்தை பெரியாரை நேரில் பார்த்திருப்பீர்கள், பேரறிஞர் அண்ணாவுடன் சிறைக்குச் சென்று, கழகப் பணிகளில் பங்கேற்று, தேர்தல் பணிகளில் ஈடுபட்டிருப்பீர்கள். அதனால்தான் உங்களை எல்லாம் பார்க்கும்போது எனக்குப் பொறாமையாக இருக்கும். ஆகவே, வந்திருக்கின்ற உங்கள் அத்தனைப் பேரையும் தந்தை பெரியாரின், பேரறிஞர் அண்ணாவின், முத்தமிழறிஞரின் கலைஞரின் மறு உருவமாக உங்களை பார்க்கிறேன். உங்களுக்கு நான் தலை வணங்குகிறேன்.

இன்று உங்களுக்கெல்லாம் பொற்கிழி வழங்கி, உங்களைப் பெருமைப்படுத்தி நாங்கள் மகிழ்கிறோம். அவற்றையெல்லாம் பெருமையாக நீங்கள் நினைப்பது எனக்கு தெரியும். உங்கள் கழுத்தில் கம்பீரமாக போட்டிருக்கின்ற கருப்பு-சிவப்பு துண்டைத்தான் பெருமையாக கருதுவீர்கள் என்று கூறிக்கொண்டு, வந்திருக்கின்ற கழக மூத்த முன்னோடிகள் நீங்கள் எங்களை வழிநடத்த வேண்டும் என்று கூறிக்கொண்டு, இந்த சிறப்பான வாய்ப்பை அளித்த, அண்ணன் நாசர் அவர்களுக்கும், ஒன்றியச் செயலாளர் கமலேஷ் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.